**செ.வெ.எண் :615** **நாள்: 22.09.2021**

# பத்திரிக்கைச் செய்தி

**முன்னாள் படைவீரா்கள் அவா்தம் துணைவியரின் பெயரை ஓய்வூதியத்திற்காக ஓய்வூதிய ஆணையில் பதிவு செய்தல்**

சென்னையில் 31.08.2021 அன்று படைவீரா் சங்கங்களுடன் செயலாளா், முன்னாள் படைவீரா் நலத்துறை, இராணுவ அமைச்சகம், புதுடெல்லி அவா்கள் மேற்கொண்ட கலந்துரையாடலில் முன்னாள் படைவீரா்கள் அவா்தம் துணைவியரின் பெயா்களை ஓய்வூதிய கொடுப்பாணையில பதிவு செய்யாமையால், முன்னாள் படைவீரரின் காலத்திற்குப்பின் அவா்தம் துணைவியா் குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்காக விண்ணப்பிப்பதில் சிரமங்கள் உள்ளது கண்டறியப்பட்டது. அதனடிப்படையில், முன்னாள் படைவீரா் நல அலுவலகங்கள் மூலம் ஓய்வூதிய கொடுப்பாணையில் துணைவியரின் பெயரை பதிவு செய்யாத முன்னாள் படைவீரா்களிடம் உரிய ஆவணங்கள் பெற்று சமா்ப்பிக்க கோரிக்கை விடுவிக்கப்பட்டது.

எனவே, ஓய்வூதிய கொடுப்பாணையில் துணைவியரின் பெயரை பதிவு செய்யாத முன்னாள் படைவீரா்கள் உரிய ஆவணங்களுடன் தஞ்சாவூா் மாவட்ட முன்னாள் படைவீரா் நல உதவி இயக்குநா் அலுவலகத்தினை அலுவலக வேலை நாட்களில் நேரில் ஆஜராகி சமா்ப்பித்து துணைவியரின் பெயரை பதிவு செய்து கொள்ள பயனடையுமாறு தஞ்சாவூா் மாவட்ட ஆட்சித்தலைவா் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவா், இ.ஆ.ப அவா்கள் தெரிவித்துள்ளாா்கள்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**